# திடீர் வெள்ள குளங்களில் இருந்து விலகி இருங்கள்

## பனிக்கட்டி மெல்லியது & பாதுகாப்பற்றது

- பாதுகாப்பற்ற பனி நிலைமைகளின் அறிகுறிகள் கண்ணில் படாமல் போகலாம்.
- பனிக்கட்டியில் துளைகள் மற்றும் விரிசல்களை பனித்துகள் மறைத்துவிடலாம்.
- தொடர்ச்சியாக தண்ணீர் பாய்வது மற்றும் மாறிக்கொண்டிருக்கும் நீர்மட்டம் பனிக்கட்டியை வலுவிழக்கச் செய்து, விரிசலாக்கலாம்.

## திடீர்வெள்ள குளங்களை விட்டு விலகி இருப்பது எப்படி

- திடீர்வெள்ள குளங்கள் மீது ஸ்கேட், ஸ்லெட் மற்றும் நடப்பது கூடாது.
- குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளை பனிக்கட்டியிலிருந்து விலக்கி வைக்கவும்.
- குளத்தின் அருகில் நடக்கும்போது, குறிப்பிட்ட நடைபாதையிலேயே தொடரவும்.
- உயிர்காப்பு சாதனம் இருக்குமிடம் அறிந்திருக்கவும்.
- காணாமல் போன உயிர்காப்பு சாதனம் பற்றி 311 க்கு தெரிவிக்கவும்.

---

# ப்ராம்ப்ட்டன் நகர பனிச்சறுக்கு வளையங்களில் ஸ்கேட் செய்யுங்கள்!

ப்ராம்ப்ட்டன் நகரம் முழுக்கவும் நகர நிர்வாகத்தின் ஏராளமான சமுதாய பனிச்சறுக்கு வளையங்கள் உள்ளன.

**மேலும் தகவல்களுக்கு எங்கள் திறந்தவெளி பனிச்சறுக்கு வலைப்பக்கத்திற்கு வாருங்கள்.**

என்னை ஸ்கேன் செய்யவும்



311

brampton.ca

BRAMPTON

# திடீர்வெள்ள குளத்திலிருந்து பாதுகாப்பு

**உங்கள் வீடு, சுற்றுப்புறம் மற்றும் சுற்றுச்சூழலை, திடீர் வெள்ளம் சூழ்வதினால் ஏற்படும் சேதத்திலிருந்து காக்க, திடீர்வெள்ள குளங்கள், உதவுகின்றன.**

## திடீர் வெள்ள குளம் என்பது எது?

- பாய்ந்துவரும் திடீர் வெள்ளம், அருகாமையில் இருக்கும் வீடுகள், சாலைகள், வாகனபாதைகள், வாகனம் நிறுத்தும் இடங்களில் இருந்து பனி உருகி வரும் நீரை சேகரித்து வைத்துக் கொள்கின்றன.
- பாய்ந்துவரும் திடீர் வெள்ளம் மற்றும் பனி உருகி வரும் நீர் ஆகியவை சாலைகளில் இருக்கும் உப்பு, மணல் கழிவுப்பொருட்கள், இலைதழைகள், மோட்டார் ஆயில், டிட்டர்ஜெண்ட்டுகள் மற்றும் குப்பைகளை திரட்டி வருகின்றன.
- இப்படியான மாசுப்பொருட்கள் திரண்டு வந்து குளத்தின் அடியில் தரைமட்டத்தில் படிந்துவிடும்.
- குளத்தின் மேல்மட்டத்தில் உள்ள சுத்தமான நீர் மட்டும் நமது ஆறுகள் ஓடைகளில் விடப்படும்.
- திடீர்வெள்ள குளங்கள் நீரை மெதுவாக வெளிவிட்டு வெள்ளம் மற்றும் அரிமானத்தை தடுக்கிறது.
- கூடவே இருக்கின்ற மரங்கள், புதர்கள், இயற்கைமயமான இடங்கள், நடக்கும் பாதைகள் மற்றும் உட்காரும் தளங்கள் இயற்கைக்கு இன்னும் அழகு சேர்க்கிறது; குடியிருப்புவாசிகளை மகிழ்ந்து அனுபவிக்க வைக்கிறது.

## நகர நிர்வாகம் என்ன செய்கிறது?

உங்களையும் சுற்றுச்சூழலையும் காக்க, நகர நிர்வாகம் 180 திடீர்வெள்ள குளங்களை அமைத்துள்ளன. இந்தக் குளங்களை நகர நிர்வாகம் இப்படி பராமரிக்கிறது:

- படிமானங்களை அகற்றுதல்
- குளங்கள் பாதுகாப்பாக இருக்கும்போது குளத்திலும், அதைச் சுற்றிலும் இருக்கும் குப்பைகளை அகற்றுதல்
- களைகளை அகற்றுதல்
- வாசற்கதவுகள் மற்றும் வால்வுகள் போன்ற கட்டுமானங்களை பராமரித்தல்
- சுற்றிலும் இருக்கும் தாவரங்கள் மற்றும் செடிகளை பராமரித்தல்
- தாவரங்களை மாற்றி வைத்தல்
- அரிமானத்தை தடுக்க கரைகளை பலப்படுத்தல்
- குளங்களைக் கண்காணித்தல்

## நீங்கள் என்ன செய்யலாம்?

- அறிவிப்பு குறிகளுக்கு உடன்படுங்கள்
- திடீர்வெள்ள குளங்களை விட்டு தள்ளியே இருங்கள்
- கரையோரங்களை விட்டு விலகி இருங்கள்
- அவசரம் என்றால் 911 ஐ அழையுங்கள்
- iOs மற்றும் Android க்காக what3words மொபைல்செயலியை பதிவிறக்குங்கள்

என்னை ஸ்கேன் செய்யவும்

